

புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மாமன்ற முதல் கூட்டத்தினை, நகராட்சி திர்வாகம் மற்றும் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு , சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர். மாவட்ட ஆட்சித் தலைவர். அருணா ஐ.ஏ.எஸ் தலைமையில் முதல் கூட்டத்தினை துவக்கி வைத்து, |பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மேயர் திலகவதி செந்தில் அவர்களுக்கு வெள்ளி செங்கோலினை வழங்கினார்கள். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா, எம். சின்னத்துரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தானமூர்த்தி , புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச் செல்வன், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளர் த.நாராயணன், புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### புதுக்கோட்டையில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்து

# ரூ.145.55 கோடியில் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எஸ்.ரகுபதி மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் நாட்டினர்!

புதுக்கோட்டை, அக்.11 -

புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மாமன்ற முதல் கூட்டத்தினை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு , சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் 09.10.2024 அன்று துவக்கி வைத்து, பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மேயர் திலகவதி செந்தில் அவர்களுக்கு வெள்ளி செங்கோலினை வழங்கினார்கள்.

பின்னர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்களுக்கு தேவையான, குடிநீர் வசதி, மின்வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி புதுக்கோட்டை மாநகராட்சி மாமன்ற முதல் கூட்டத்தினை துவக்கி வைத்து, ரூ.145.55 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள புதை வடிகால், புதை வடிகால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிய குடிநீர் திட்டம் மற்றும் புதிய பேருந்து நிலைய கட்டிடப் பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அந்த வகையில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.18.90 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலைய கட்டிட பணியினையும் மற்றும் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.101.34 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப் பணியினையும் மற்றும் ரூ.25.31 கோடி மதிப்பீட்டில் 24 X 7 மணிநேரம் குடிநீர் வழங்கும் திட்டப் பணியினையும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

இதில், பாதாள சாக்கடை அமைக்கும் திட்டமானது, 1, 2, 3, 4, 40, 41, 42 ஆகிய 7 வார்டுகளில் அமைக்கப்படுகிறது. மேலும் 8,101 வீட்டு இணைப்புகளுக்கும் இத்திட்டம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30,500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள். மேலும், குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம் 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் 38, 39, 40, 41, 42 ஆகிய 5 வார்டுகளில் அமைக்கப்படுகிறது. இதில் 3,850 குடிநீர் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 22,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள். இப்பணிகள் அனைத்தையும் தரமாகவும்,

விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்புமிக்க திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார். பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் மீது மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி மாமன்ற முதல் கூட்டத்தினை துவக்கி வைத்து, ரூ.145.55 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த வகையில், புதிய

பேருந்து நிலையம் கட்டுவதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறின்றி பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் சென்று வர முடியும். மேலும், பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் கழிவு நீர் கால்வாய்களில் வழிந்தோடி சாலைகளில் கழிவு நீர் தேங்காமல் இருக்கும். குடிநீர் வழங்கும் திட்டம் பயன்பாட்டிற்கு வரும் பட்சத்தில் அப்பகுதி பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் சீரான குடிநீர் வழங்கப்படும் வகையில் திட்டம் செயல்படுத்தப்படும்.

எனவே, பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றி வரும் தமிழக அரசின் திட்டங்களை தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய முறையில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தானமூர்த்தி, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச் செல்வன், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுவிச்சுடர் இராசு.கவிதைப்பித்தன், புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆசெந்தில், . மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் க.முகமது இப்ராஹிம், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) காளியப்பன், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த த.சந்திரசேகரன், தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.34.60 லட்சம் மதிப்பீட்டில்

# கோவில் புரையூர் மதுரா மோட்டூர் கிராமத்தில் 2 புதிய வகுப்பறை கட்டடங்கள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, பணியை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 11-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கோவில் புரையூர் ஊராட்சி மதுரா மோட்டூர் கிராமத்தில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ 34.60லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 34.60 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்துபொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார். நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் சிவ சண்முகம், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்,ஒன்றிய பொறியாளர் நாராயணசாமி,ஒன்றிய கவுன்சிலர் காசியம்மாள் கோதண்டம்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பச்சையப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் எஸ்.பி. சம்பத், அரங்கநாதன்,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் புஷ்ப ஆறுமுகம், முன்னாள் துணைத் தலைவர்கள் சம்பத், சீனு ,சண்முகம், நிர்வாகிகள் எஸ். எம். ஏழுமலை, தோப்பு சம்பத், பச்சையப்பன், சீனிவாசன், மணிகண்டன்,மூர்த்தி கோவிந்தராஜ், முருகன், சின்னதுரை, விஜயகுமார்,காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைகள் சார்பில் அரிமளம் ஒன்றியம் கடியாபட்டி ஊராட்சியில் கிராம ஊராட்சிகளின் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு 71.35 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தினை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் உடன் வருவாய் கோட்டாட்சியர் வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஒன்றிய பெருந்தலைவர் மேகலா முத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் பொன் ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம் நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட காரமடை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய பகுதிகளில் முடிவுற்ற பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா தொடங்கி வைத்தார்.

### எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில்

# தமிழகத்தில் புதிய தொழிற்சாலை, முதலீடுகள் இல்லை!

## மேட்டுப்பாளையத்தில் ஆ.இராசா எம்.பி. பேச்சு

கோவை, அக்.11-

கோவை மாவட்டம் நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட காரமடை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய பகுதிகளில் முடிவுற்ற பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா தொடங்கி வைத்தார் அதன் அடிப்படையில் ஓடந்துறை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 13 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான மேல்நிலைத் தொட்டி, காரமடை மேற்கு ஒன்றியம் விஜயநகரம் பகுதியில் 21 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டி, அதனைத் தொடர்ந்து காரமடை ஊராட்சி ஒன்றியம் ஜடையம்பாளையம் பகுதியில் 32 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய இரண்டு வகுப்பறை கட்டிடங்களை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி , ஜடையம்பாளையம் ஊராட்சித் தலைவர் ஆர் கே. பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நீலகிரி எம் பி ஆ.இராசா கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சி தொடர்ந்து பெள்ளேபாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்தார் குறிப்பாக முதல்வரின் கிராமசாலை திட்டத்தில் ரூபாய் 28 லட்சம் மதிப்பீட்டில் பெள்ளேபாளையம் முதல் தென் பொன்முடி வரை புதிதாக போடப்பட்ட தார் சாலையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். அப்போது பொதுமக்களிடையே பேசிய அவர் பெரிய தொழிற்சாலை தமிழகத்திற்கு வர வேண்டும் என்றாலும் படித்த இளைஞர்கள் வேலை இன்றி தவிக்கின்றனர் கடந்த எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் புதிய தொழிற்சாலைகள் இல்லை புதிய முதலீடுகள் இல்லை

ஆனால் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு வெளிநாட்டில் இருந்து பல லட்சம் கோடி முதலீட்டுகளை கொண்டு வந்து புதிய தொழிற்சாலைகளை துவக்கி வேலையில்லாத திண்டாட்டத்தை தவிர்க்க வேண்டும் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக உழைத்து வருகிறார்.

எதிர்கால தலைமுறைக்கு என்ன வேண்டும் என்பதை பார்த்து பார்த்து செய்து வருவதால் தமிழ்நாட்டில் மட்டும் இன்றி இந்தியாவில் உள்ள அனைத்து முதலமைச்சர்களையும் ஆய்வு செய்து அவர்கள் எப்படிப்பட்ட பணிகளை அந்தந்த மாநிலத்திற்கு செய்கிறார்கள் என்பதற்கு மதிப்பெண் போட்டு இந்தியாவிலேயே நம்பர் ஒன் முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் என்று அங்கீகாரம் வழங்கியுள்ளனர் இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சி கள் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ் எம் டி .கல்யாணசுந்தரம், காரமடை மேற்கு ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டிஆர்.சண்முகசுந்தரம், அசரப்அலி, பொள்ளேபாளையம் ஊராட்சி தலைவர் பிரஸ்குமார், ஓடந்துறை ஊராட்சி தலைவர் தங்கவேல்,இளைஞரணி துணை அமைப்பாளர் விக்கி உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியம் நரிமணம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ. 23 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டிடத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என். கௌதமன் திறந்து வைத்தார். உடன் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், திருமருகல் ஒன்றியச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன், நரிமணம் ஊராட்சி மன்ற தலைவர் பி.என்.கார்த்திக் மற்றும் பலர் உள்ளனர்.


